வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632

# ஈழநாடு

விலை ரூ. 30/=



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram
Ria MONEY TRANSFER
WESTERN UNION MONEY TRANSFER
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 16.06.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 161 பக்கங்கள் : 08

## 5 படுகொலைச் சம்பவங்களுடன் பிள்ளையானுக்கு முழு தொடர்பு!

### மட்டக்களப்பு நீதிமன்றத்தில் நேற்று விவரங்களை சமர்ப்பித்துள்ளது சி.ஐ.டி.



மட்டக்களப்பு, ஜூன். 16

முன்னாள் பிரதி அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) உள்ளிட்ட மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக, மட்டக்களப்பு பிராந்தியத்தில் அரங்கேறிய ஐந்து வெவ்வேறான படுகொலைச் சம்பவங்கள் தொடர்பான விவரங்களைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), ராசிக் மொஹமட் பைஸ் மற்றும் ஹமீத் லெப்பே மொஹட் ஆகியோரே இந்த புலனாய்வு விசாரணையில் சந்தேக நபர்களாகப் 07

## இலங்கை பொருளாதாரம் 5.1 வீத வலுவான வளர்ச்சி!

கொழும்பு, ஜூன். 16

நடப்பு 2026 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5.1 வீத வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாகத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிவித்துள்ளது

இதற்கமைய, நிலையான விலைகளின் அடிப்படையில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கடந்த 2025 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் காணப்பட்ட 34 இலட்சத்து 76 ஆயிரத்து 664 மில்லியன் ரூபாயில் இருந்து, இவ்வாண்டின் இதே காலப் பகுதியில் 36 இலட்சத்து 52 ஆயிரத்து 503 மில்லியன் ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

நடப்பு விலைகளின் அடிப்படையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 11 வீத வளர்ச்சியைப் பதிவு செய்து 91 இலட்சத்து 64 ஆயிரத்து 652 07

## செம்மணி புதைகுழியில் நேற்றும் ஐந்து என்புக்கூடுகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன். 16

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இரு சிறுவர்கள் கைக்குழந்தையின் உள்ளடங்கலாக 10 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி புதைகுழியின் மூன்றாம் கட்டப் அகழ்வுப் பணியின் 25ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றன.

அதன்போது புதிதாக 05 மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளில் சிறுவர்கள், குழந்தையின் என்புக்கூடுகள் உள்ளடங்கலாக 10 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மீட்கப்படும் என்புக்கூடுகள் பல உடைந்த நிலையில், நேர்சீரின்மையான நிலையில் காணப்படுகின்றன.

அதனடிப்படையில் இது வரையிலான அகழ்வு பணிகளின் போது, 360 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 351 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (அ) 07

## இராணுவத்தை உடன் வெளியேற்றி சொந்த மண்ணில் வாழ விடுங்கள்!

### யாழ். மாவட்ட செயலகம், பலாலி சந்தியில் மக்கள் திரண்டு மாபெரும் போராட்டங்கள்




யாழ்ப்பாணம், ஜூன். 16

37 ஆண்டுகளாக தமது பூர்வீகக் காணிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றி, தங்களைச் சொந்த இடங்களில் சுதந்திரமாக வாழ அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வலி.வடக்கு மக்களால் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தின் இரண்டு இடங்களில் மாபெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து தமிழ் மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாக கட்டாயமாக வெளியேற்றப்பட்டு நேற்று திங்கள் கிழமையுடன் 37 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இந்நிலையில், தங்களை உடனடியாகச் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வலியுறுத்தி யாழ். மாவட்ட செயலகம் முன்பாகவும், பலாலிச் சந்திக்கு அருகிலும் நேற்று காலை அவர்களால் மாபெரும் கவனவீர்ப்புப் 07

## அதிஉயர் பாதுகாப்பு வலயம் குறித்த வர்த்தமானியை மீள பெறவேண்டும்!

### மயிலிட்டி மக்கள் வடக்கு ஆளுநருக்கு மனு



யாழ்ப்பாணம், ஜூன். 16

2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி (இல. 1810) முழுமையாக நீக்கப்பட வேண்டும் எனக் கோரி மயிலிட்டி மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநரிடம் நேற்று மனு ஒன்றைக் கையளித்தனர். 07

## சாலேயுக்கு எந்த பிரச்னையும் இல்லை விசாரணைக்கு ஒத்துழைக்கவேண்டும்!

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஜூன். 16

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதற்கு விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டுமே தவிர, அவற்றைச் சீர்குலைக்க முற்படக்கூடாது என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சாலே அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது ஊட்டச்சத்து நிலைமையில் எந்தப் பிரச்னையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பேராதனை போதனா 07

## சுரேஷ் சாலேயை விசாரியுங்கள் ஆனால் பழிவாங்க வேண்டாம்!

### விஜயதாஸ ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஜூன். 16

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றும், எனினும் விசாரணை என்ற பெயரில் எவரையும் பழிவாங்கவோ அல்லது கொலை செய்யவோ கூடாது என்றும் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்துடன், "பயங்கரவாதத் தடைச் சட்டம் 07

## நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் மீண்டும் இணைந்தது வடதாரகை!

### விரைவில் குமுதினி, நெடுந்தாரகை சேவையில்

யாழ்ப்பாணம், ஜூன். 16

நெடுதீவுக்கான பயணிகள் சேவையில் ஈடுபட்டு வந்த வடதாரகை படகு , திருத்த வேலைகள் நிறைவடைந்த நிலையில் நேற்று திங்கள்கிழமை முதல் மீண்டும் சேவையில் இணைக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் - நெடுந்தீவுக்கு இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த வடதாரகை , நெடுந்தாரகை மற்றும் குமுதினி ஆகிய மூன்று படகுகளும் பழுதடைந்தமையால் நெடுந்தீவுக்கான பயணத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. 07

ஈஸ்டர் தாக்குதல் விசாரணை;

## ஊடகங்களில் முக்கிய நபர்களின் உரைகளால் நீதிமன்ற அவமதிப்பு!

### குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 16

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் குறித்து ஊடகங்களில் கருத்து வெளியிட்ட பல முக்கிய நபர்களின் உரை, நீதிமன்ற அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளது 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லுக்கு உரிய நிர்ணய விலை கோரி கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் பேரணி!

## இன்று நடத்துவதற்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூன். 16

நெல்லுக்கான உரிய நிர்ணய விலையை வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் பேரணி ஒன்றை இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

இன்னும் 15 நாள்களில் நெல் அறுவடை ஆரம்பமாகவுள்ள நிலையில் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப நெல்லுக்கான நிர்ணய விலை கிடைக்கவில்லை எனவும் அரசாங்கம் உரிய விலையை வழங்க வலியுறுத்தி இன்று கிளிநொச்சி நகர் சித்தி விநாயகர் ஆலய முன்றலிருந்து மாவட்ட செயலகம் வரை கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனை இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளன தலைவர் முத்து சிவமோகன் மற்றும் மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் அதிகார சபை தலைவர் சுப்பிரமணியம் யதீஸ்வரன் ஆகியோர் தெரிவித்தனர். (அ)

# அமெரிக்கா-ஈரான் உடன்படிக்கை வரவேற்கின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூன். 16

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே எட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படும் உத்தியோகபூர்வ உடன்படிக்கையை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வரவேற்றுள்ளார்.

பேச்சுவார்த்தை என்பது மனிதகுலத்தின் மிகப்பெரிய பலம் என்பதை இந்த உடன்படிக்கை மீண்டும் நினைவூட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் விடுத்துள்ள பதிவில், "பிளவுகளினால் ஏற்படும் இழப்புகளையும், நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தையும் இலங்கை நன்கு அறியும். அமைதி என்பது வெறும் யுத்தம் இல்லாத நிலை மாத்திரமல்ல, அது நம்பிக்கை, கண்ணியம், வாய்ப்புகள் மற்றும் நமது பிள்ளைகள் ஒரு சிறந்த எதிர்காலத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையின் பிரசன்னமாகும். உலக மக்கள் இதற்கு எவ்வகையிலும் குறைந்தவர்களுக்கு உரியவர்கள் அல்லர். அமைதி நிலவட்டும்."-என தெரிவித்துள்ளார்.

ஈரானிய துறைமுகங்கள் மீதான அமெரிக்காவின் முற்றுகையை நீக்குவது உள்ளிட்ட பல்வேறு இணக்கப்பாடுகளை உள்ளடக்கிய உடன்படிக்கையொன்றை வொஷிங்டன் மற்றும் தெஹ்ரான் எட்டியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்த நிலையிலேயே, எதிர்க்கட்சித் தலைவர் இந்த வரவேற்பை பதிவு செய்துள்ளார்.

(அ)

# மருத்துவமனையில் காவலர்களை தாக்கிய 2 பேர் கைது!

கொழும்பு, ஜூன். 16

சிலாபம் பொது மருத்துவமனையில் 3 பாதுகாவலர்களைத் தாக்கிய இருவரை பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு சிலாபம் பொது மருத்துவமனையில் மூன்று பாதுகாவலர்கள் மீது இருவர் நடத்திய தாக்குதலில், மேலும் இருவர் காயமடைந்து சிகிச்சைக்காக அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சிகிச்சை பெற்றுவரும் ஒரு நோயாளியைப் பார்ப்பதற்காக, மது போதையில் இருந்த ஒருவரும் மற்றொரு நபரும் மருத்துவமனைக்குள் வலுக்கட்டாயமாக நுழைய முயன்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தமிழ் மக்களை ஒரு தேசமாக கட்டி எழுப்பப் பாடுபடுவோம்!

## ரெலோ தேசிய மாநாட்டில் பிரகடனம்

வவுனியா, ஜூன். 16

தமிழ் தேசியப் பரப்பில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் சமூக அமைப்புகளையும் பிரதான பலமாக விளங்குகின்ற புலம்பெயர் உறவுகளையும் ஒருங்கிணைத்து தமிழ் மக்களை ஒரு தேசமாக கட்டி எழுப்புவதற்கு அயராது பாடுபடுவோம் என்று ரெலோவின் தேசிய மாநாட்டில் பிரகடனம் வெளியிடப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 12 ஆவது தேசிய மாநாடு நேற்று முன் தினம் வவுனியாவில் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் மாநாட்டு பிரகடனம் வெளியிடப்பட்டது.

அந்த பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ஈழத் தமிழ் மக்களின் தாயக பூமியான வடக்கு-கிழக்கு பிரதேசத்தை உள்ளடக்கிய எமது சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய மீளப் பெறப்பட முடியாத பூரண அதிகாரம் உடைய சமஷ்டி முறையிலான சுயாட்சி அலகொன்றை அரசியல் தீர்வாகப் பெற்றுக் கொள்வதற்காக தொடர்ந்து அரசியல் ரீதியாக சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவும், எமது மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட யுத்த குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றுக்கான சர்வதேச நீதிப் பொறிமுறையை பெற்றுக் கொள்ளும் வரை உள்நாட்டு மற்றும் சர்வதேச சக்திகளோடு ஒன்றிணைந்து செயல்படவும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிப் பொறிமுறையை பெற்றுக் கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும், எமது தாயக மண்ணில் அரச இயந்திரங்களினால் தொடர்ந்தும் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்ட மற்றும் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் காணிகளை மீட்கவும் மேலதிகமான அபகரிப்புகளை தடுக்கவும், தொடர்ந்து உரிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவும், நிரந்தரமான அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளும் வரையில் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள மாகாண சபை முறைமையை முற்று முழுதாக நடைமுறைப்படுத்தவும், மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்த தொடர்ந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும்,

எமது மக்களின் நலிந்து போன பொருளாதாரத்தை மீளக் கட்டியமைக்கும் முகமாக, பலதரப்பட்ட முதலீடுகளின் ஊடாக எமது மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தக்கூடிய இனக்குடிப் பரம்பலை பேணக்கூடிய தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவதற்கான அனைத்து வேலை திட்டங்களையும் அர்ப்பணிப்புடன் செயல்படுத்தவும்,

எமது சமுதாயத்தின் உள்ள அனைத்து தரத்தினரதும் வாழ்க்கை தரத்தினையும் சமூக மேம்பாட்டையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் நமது அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கவும், அனைத்து வேலை திட்டங்களையும் நடைமுறைச் சாத்தியமான வகையில் முன்னெடுப்பதற்கு பிராந்திய வல்லரசு நாடான இந்தியாவுடனான நமது உறவை தொடர்ந்து பேணிப் பாதுகாக்கவும், மற்றைய சர்வதேச நேச சக்திகளை ஒருங்கிணைக்கவும் உரிய வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கவும், தமிழ் தேசிய பரப்பில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் சமூக அமைப்புகளையும் எமது பிரதான பலமாக விளங்குகின்ற புலம்பெயர் உறவுகளையும் ஒருங்கிணைத்து தமிழ் மக்களை ஒரு தேசமாக கட்டி எழுப்பும் அனைத்து வேலை திட்டங்களையும் அயராத முன்னெடுக்கவும் இப் பிரகடனம் விதந்துரைக்கிறது -என்றுள்ளது. (அ)

# வடக்கின் "கரம்" சம்பியனானார் வேலணை மாணவி விதுர்ஷினி!



யாழ்ப்பாணம், ஜூன். 16

வடமாகாண மட்ட திறந்த கரம் போட்டியில் யாழ் மாவட்ட அணி சார்பில் ஒற்றையர் ஆட்டத்திலும் குழு போட் டியிலும் கலந்து கொண்ட ஜெ.விதுர்ஷினி இந்த வருடத் திற்கான வடக்கு மாகாண சம்பியனாக தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

அதேபோன்று குழு போட்டியிலும் கலந்துகொண்டு வட மாகாண அணிக்கு தனது திறமையை வெளிப்படுத்தி அணி சம்பியனாவதற்கும் பங்காற்றியுள்ளார்.

முன்பதாக கடந்த ஏப்ரல் 18 ஆம் திகதி நடைபெற மாவட்ட மட்ட கரம் போட்டியில் வேலணை பிரதேச செயலகம் சார்பில் கலந்து கொண்டு மாவட்ட மட்ட போட்டியில் வெற்றி பெற்று யாழ் மாவட்ட அணியில் இடம் பிடித்திருந்த ஜெ.விதுர்ஷினி, நேற்று முன்தினம் யாழ்.இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற மாகாண மட்டப் போட்டியிலும் வெற்றி பெற்றிருந்த நிலையில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட போட்டியில் வடக்கு மாகாணம் சார்பாக கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை கரம் போட்டியில் தீவக மண்ணைச் சார்ந்த வீரரொருவர் வடக்கு மாகாண அணியில் பங்கேற்று தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்வது இதுவே முதற்தடவையாகும்.

(அ)

# சுரேஷ் சாலேயிடம் விசாரணைகள் தங்குதடையின்றி தொடரவேண்டும்!

## வலியுறுத்துகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜூன். 16

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலே மீது தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய விசாரணைகள் மிகவும் சரியானது என்றும், அது தங்குதடையின்றி தொடர வேண்டும் என்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உண்மையான குற்றவாளிகளையும் அதன் பின்னணியையும் வெளிக் கொண்டு வரும் தற்போதைய அரசின் இந்த நேர்மையான முன்னெடுப்புகளுக்கு நாட்டின் அனைத்துத் தரப்பினரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து ஊடகங்களுக்கு விடுத்த விசேட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில்-

அப்பழுக்கற்ற இஸ்லாமிய மார்க்கத்துக்கு முரணான இஸ்லாமிய அடிப்படைவாதம் நாட்டில் இருந்தது என்பது உண்மைதான். இல்லாவிட்டால், வெளியில் இருந்து எவர் தூண்டிவிட்டாலும் கூட, தற்கொலை குண்டுதாரியாக மாறும் அளவுக்கு யாரும் துணிய மாட்டார்கள். ஆனால், இந்த ஒரு சில தீவிர அடிப்படைவாதிகள் ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம் மக்களையும் எவ்விதத்திலும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

உண்மையில், இந்த தீவிரவாதக் குழுக்கள் குறித்துப் பல முஸ்லிம் சமூக, மதப் பிரமுகர்கள் உரிய காலப்பகுதியில், மிகுந்த பொறுப்புணர்வுடன் பொலிஸாருக்கு எழுத்துமூலமாகத் தெளிவான தகவல்களை வழங்கியிருந்தனர். நபர், இடம் உள்ளிட்ட துல்லியமான விவரங்கள் பொலிஸாரிடம் இருந்தன.

எனவே, இந்தத் தற்கொலைத் தாக்குதல்களைத் திட்டமிட்ட வெறியர்களை முன்கூட்டியே கைது செய்து விசாரிக்கக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் போதிய அவகாசமும், ஆதாரங்களும் இருந்தன. அவர்களைக் கைது செய்து, தீவிரவாத ஒழிப்புப் புனர்வாழ்வு வழங்கிப் பாரிய விபரீதத்தைத் தடுத்திருக்கவும் வாய்ப்புகள் இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, அண்டை நாடான இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு புலனாய்வு ஏஜென்சிகளும் காத்திரமான எச்சரிக்கைத் தகவல்களை உரிய நேரத்தில் வழங்கியிருந்தன.

தடுத்த அந்த 'மர்மக் கரம்' எது என்பதும், இவற்றுக்குப் பின்னால் உள்ள மாபெரும் சூத்திரதாரி யார் என்பதும் சட்டத்தின் முன் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும்-என்று வலியுறுத்தியுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
16.06.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், ஆனி 02

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## பயங்கரவாத தடைச்சட்ட நீக்கம்; அமைச்சர் ஹேரத்தின் புதிய அறிவிப்பு

பயங்கரவாத தடைச்சட்டத்தை. இரத்துச் செய்வதாக வாக்குறுதி அளித்துக் கொண்டு பதவிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் அதிகமான காலப்பகுதியில் அந்த சட்டத்தை தொடர்ந்து பயன்படுத்திவருவது தொடர்பில் கடுமையான விமர்சனங்கள் முன்வைக் கப்பட்டு வருவதற்கு மத்தியில், அந்த சட்டத்தை பதிலீடு செய்வதற்கான சட்டம் ஒன்று இரு மாதங்களில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்று வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் அறிவித்திருக கிறார்.

அரசாங்கம் ஏற்கெனவே தயாரித்து நீதியமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடிருந்த "பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்ட மூல வரைவு" பயங்கரவாத தடைச்சட்டத்தை விடவும் கொடுமையானதாக உள்நாட்டு மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், அரசியல் கட்சிகளின் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகி யாருந்தது.

அந்த வரைவு தொடர்பில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களையும் பல் வேறு அமைப்புக்களினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளையும் கருத் தில் எடுத்தே புதிய சட்டமூலம் வரையப்பட்டிருப்பதாக அமைச்சர் ஹேரத் ஞாயிறன்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வது தொடர்பாக ஆராய்வ தற்காக ஜனாதிபதி சட்டத்தரணி றியன்சி அர்சகுலரத்ன தலைமையில் நியமிக் கப்பட்ட குழுவின் சில முன்மொழிவுகள் சட்டமூல வரைவில் சேர்க்கப்பட்டிருப்ப தாக கூறிய வெளியுறவு அமைச்சர் அந்த குழு பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கான சட்டச் சீர்திருத்தச் செயன்முறை பரந்தளவிலான கருத் துக்களை உள்வாங்கி பரிசீலனை செய்யப்படுவதை உறுதிசெய்வதற்காக உள்நாட்டு சிவில் சமூக அமைப்புக்களிடமிருந்தும் சர்வதேச அமைப்புக்களிட மிருந்தும் அந்த குழு முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டதாகவும் குறிப் பிட்டார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக சட்டமூல வரைவு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். இரு மாதங்களில் இந்த செயன்முறைகளை நிறைவு செய்வதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது என்பதை அமைச்சரின் கூற்று மூலம் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது.


பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்காக கடந்த ஒரு தசாப் தகாலப் பகுதிக்குள் முன்னெடுக்கப்படும் மூன்றாவது முயற்சி இதுவாகும். முதலில் நல்லாட்சி அரசாங்கத்தினாலும் பிறகு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் அரசாங்கத்தினாலும் முன்வைக்கப்பட்ட பதிலீட்டு சட்டமூலங்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் கொடுமையான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன. அதே போன்றே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் கடந்த வருடம் முன்வைக்கப்பட்ட சட்டமூல வரைவும் மேலும் கடுமையான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்வதாக அரசாங்கங்கள் கூறிக் கொண்ட போதிலும், அதை தொடர்ந்தும் வைத்திருப்பதே அவற்றின் உண்மையான நோக்கம் என்பதாலேயே அந்த சட்டத்தை விடவும் கடு மையான ஏற்பாடுகள் கொண்ட சட்டமூல வரைவுகளை முன்வைத்தன என்ற விமர்சனங்கள் கிளம்பின. முன்னைய பதிலீட்டு சட்ட மூலங்கள் தொடர்பில் வெளியான விமர்சனங்களை நன்னம்பிக்கயின் அடிப்படையில் பரிசீல னைக்கு எடுத்து தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய சட்டமூலத்தை வரைந் திருக்காவிட்டால் இந்த மூன்றாவது முயற்சியும் பயனளிக்காமல் போய்விடும்.

புதிய வரைவை பொருத்தமான ஐக்கிய நாடுகளின் அமைப்புக்களினதும் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அந்த்ரே பிரான்ஜ்சினதும் பார்வைக்கு அனுப்பியதாகவும் அமைச்சர் ஹேரத் கூறுகிறார். பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலீடாக கொண்டுவரப்படும் சட்ட மூலம் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் பெறுவதில் அரசாங் கத்துக்கு இருக்கும் அக்கறையை இது வெளிக்காட்டுகிறது.

ஆனால், புதிய சட்ட மூல வரைவு பகிரங்கத்துக்கு வந்தால் மாத்திரமே அரசாக்கம் ஏற்கெனவே முன்வைக்கப்பட்ட சட்டமூல வலைவுகள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பயனுறுதியுடைய விமர்சனங்களை எந்தளவுக்கு கருத் தில் எடுத்துச் செயற்பட்டிருக்கிறது என்பது தெரியவரும்.

## சித்திரவதை சட்டவிரோதமானது, ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் அதுவொரு வழமை



2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்கு தல்கள் தொடர்பாக, அரச புல னாய்வுப் பிரிவின்) முன்னாள் தலைவரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிரா கப் பல அரசியல் கட்சிகள் கிளர்ந் தெழுந்துள்ளன.

பல்வேறு குற்றங்களுக்காக குற்றப்புலனாய்வுத் திணைக்க ளத் (சி.ஐ.டி.) தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய சந்தேக நபர்களுக்கு முன்னிலையில் இந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரியை அவம தித்து, அவருக்கு உணவளிக்காமல் பட் டினி போடுவதன் மூலம் அரசாங்கமும் குற்றப்புலனாய்வுத் திணைக்களமும் அவரை துன்புறுத்துவதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

விடுதலைப் புலிகளை அழித்ததற்காக பாதுகாப்புப் படையினரை பழிவாங்கத் துடிக்கும் தமிழ் புலம்பெயர் அமைப்புக ளின் விருப்பு வெறுப்புகளுக்கு இணங் கவே, "யுத்த வீரர்களை" அவமதிப்பதித்து அரசாங்கம் செயற்படுவதாக அவர்கள் கூறிவருகின்றனர்.

இருப்பினும், இந்தக் கைது விவகாரம் தொடர்பாக இந்த அரசியல் கட்சிகளின் தலைவர்களால் இன உணர்வுகள் தூண்டப் பட்ட போதிலும், இந்த கைதுக்கு எதிர்ப் புத் தெரிவித்து கடந்த வாரம் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நடை பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு வருகை தந்த மக்களின் எண்ணிக்கை ஏமாற் றமளிக்கும் வகையில் மிகக் குறைவாகவே இருந்தது.

மேலும் சுவாரஸ்யமான விடயம் என்ன வென்றால், சாலே உயிர்த்த ஞாயிறு பயங் கரவாதத் தாக்குதல்களைத் திட்டமிட்டார் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் குற்றம் சாட்டப்பட்டிருந்த போதிலும், ராஜபக்சாக்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஏனைய முக்கிய தலைவர்க ளும் இந்த போராட்டக் களத்தில் காணப் படவில்லை. ராஜபக்சாக்கள் சார்பாகவே சாலே இந்தத் தாக்குதலைத் திட்டமிட்டார் என்று பல அரசியல் கட்சிகளும் குற்றம் சாட்டியிருந்தன.

முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவுத் தலைவருக்கு ஆதரவாகப் போராடும் கட் சிகள் இப்போது கொடூரமான பயங்கரவா தத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரு வது முரண்பாடானதாகும். ஒரு புலனாய்வு அதிகாரியாக பயங்கரவாதத் தடுப்புச் சட் டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல சந் தேக நபர்களைக் கையாண்ட சாலேயும், அவருக்கு ஆதரவாகப் போராடும் கட்சிக ளும் இப்போது அந்த கொடூரமான சட் டத்தை ரத்து செய்யுமாறு கோரி வருகின் றனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன் னாள் அரச புலனாய்வுப் பிரிவுத் தலைவரை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் சித்திர வதை செய்வதாகவும், இதனால் அவர் முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக வும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தடுப்புக் காவல் அறையில் உள்ள கொடூர மான சூழ்நிலைகளையும், தனக்கு இழைக் கப்படும் தவறான நடத்தைகளையும் தாங்க முடியாமல் அந்த சிரேஷ்ட அதிகாரி அழு ததாக அவர்கள் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் சாலேயைப் பார்வையிட்ட பின்னர் அவ ரது சகோதரர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், சாலேக்கு எதிரான விசா ரணைகளுக்குத் தான் எதிரானவர் அல்ல என்றும், ஆனால் அவர் மனிதாபிமானத்து டன் நடத்தப்பட வேண்டும் என்றும் கூறி னார்.

மறுபுறம், அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தனது முகநூல் பக்கத்தில், "எங்களுக்கு இருந்த சூழ்நிலை அவருக்கு இருப்பதை விட மோசமாக இருந்தது என்பது எங்க ளைத் தடுத்துவைத்த சாலேக்கு தெரியும் ." என்று பதிவிட்டிருக்கிறார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் சந்தே கத்திற்கு இடமின்றி ஒரு கொடூரமான சட் டமாகும், அதை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும், சந்தேக நபர்கள் காவலில் வைக்கப் பட்டுள்ள காலத்தில் அவர்கள் மனிதாபிமா னத்துடன் நடத்தப்பட வேண்டும் என்ற வாதமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதே. இருப் பினும், பல்லாயிரக்கணக்கானோருக்கு எதி ராக பல தசாப்தங்களாக ஒரு சட்டத்தைப் பயன்படுத்துவதை ஆதரித்துவிட்டு, அது உங்களுக்கு எதிராகத் திரும்பும்போது மட் டும் அந்தச் சட்டத்தை நீக்கக் கோருவது முற்றிலும் பாசாங்குத்தனமானது.

இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் சித்திரவதை என்பது சட்டவிரோதமானது. "எந்தவொரு நபரும் சித்திரவதைக்கு அல் லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல் லது அவமதிப்பான நடத்தப்படலாகாது அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்பட லாகாது" என்று இலங்கை அரசியலமைப்பு தெளிவாகக் கூறுகிறது. மேலும் இலங்கை சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் உடன்படிக்கையில் ஒரு உறுப்பு நாடாகும் என்பதுடன், அதன் விருப்பத்திற்குரிய நெறி முறையையும் ஏற்றுக்கொண்டுள்ளது.

இருப்பினும், குற்றங்கள், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் சிறிய குற்றங்கள் தொடர்பில் சந்தேக நபர்களை விசாரணை செய்யும் போது சித்திரவதை என்பது ஒரு வழமையாகவே கிட்டத்தட்ட அனைத்து நாடுகளிலும் உத்தியோகபூர்வமற்ற முறை யில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சந்தேக நபர்களை விசாரணை செய்யும் போது இது ஒரு பொதுவான நடைமுறையாக இருந்து வந்தாலும், இது எல்லோருக்கும் தெரிந்ததாக இருந்தாலும், மிகச் சில சம்ப வங்களே செய்திகளாக வெளிவருகின்றன.

(மிகுதி நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஜூன் - 16 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம் - ஆனி 02
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். உறவினர்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். குடும்பத்தில் சலசலப்புகள் வரும். உங்களைப் பற்றி சிலர் தவறாக பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள்.

**கடகம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத் தாங்கல் வரும். எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். ஆதாயம் தரும் நாள்.

**சிம்மம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். சிறப்பான நாள்.

**கன்னி**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். மனநிறைவு கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக போய் முடியும். யாரும் தன் னைப் புரிந்துக்கொள்ள வில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**தனுசு**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு.

**மகரம்**
வழக்கில் சாதகமாக தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறும். அரசால் அனுகூலம் உண்டு.

**கும்பம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும்.

**மீனம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

# நாட்டில் இனவாதமும் மதவாதமும் தலைதூக்க இடமளிக்கமாட்டோம்!

## அமைச்சர் ஆனந்த விஜேபால கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன். 16

நாட்டில் இனவாதமும் மதவாதமும் தலைதூக்க இடமளிக்க மாட்டோம் எனவும், அனைவருக்கும் ஒரே வகையான நீதி வழங்கப்படும் எனவும், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கான புதிய கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வடக்கு மாகாணத்தில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், சட்டவாக்கத்தை விரைவுபடுத்துவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த நாட்டில், சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர் என அனைத்து இனத்தவர்களுக்கும், சமமாக சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என வேறுபாடு இன்றி,

நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சட்டத்தை அமுல்படுத்தவேண்டும்.

தெற்குப் பகுதியில் உள்ள அரசியல்வாதிகள், இனங்களுக்கு இடையில் முறுகலை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிடுகின்றனர்.

அவர்களுக்கு கூறிக்கொள்வது என்னவென்றால், நாட்டில் இனவாதமும் மதவாதமும் தலைதூக்க இடமளிக்கமாட்டோம்.

அரசாங்கத்தின் முக்கிய நோக்கம், இந்தப் பகுதியில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர்கள் சுதந்திரமாகவும், சந்தோசமாகவும் வாழ வழியை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

அதனால், அனைவருக்கும் ஒரே வகையான நீதி வழங்கப்படும்-என்றார். (அ)

# இயக்குநர் பாரதிராஜாவுக்கு கரவெட்டியில் நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன். 16



தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநரான "இயக்குநர் சிக ரம்" பாரதிராஜாவுக்கு கரவெட்டி கிழக்கு சிவனேசன் பொது நோக்கு மண்டபத்தில் உணர்வு பூர்வமான நினைவஞ்சலி கூட்டம்நடைபெற்றது.

சிவனேசன் பொது நோக்கு மண்டப தலைவரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பலரும் கலந்து கொண்டு அன்னாரது கலைச்சேவையையும் நினைவுகளையும் பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்வின் தொடக்கமாக ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஈகச்சுடரேற்றி, பாரதிராஜாவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சிவனேசன் பொது நோக்கு மண்டப உறுப்பினர்கள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் மலர் தூவி தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், இயக்குநர் சிகரம் பாரதிராஜாவின் திரைத்துறைப் பங்களிப்புகள் மற்றும் அவரது கலைப்பயணம் குறித்த நெகிழ்ச்சியான நினைவுரை ஆற்றினார்.

இந்தக் கூட்டத்தில் கலை ஆர்வலர்கள், பொதுமக்கள் மற்றும் கழகப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)

# சுக்கிரவார சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன். 16

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 57 வது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையினை தொடர்ந்து தலைமையுரை யினை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும், சிறப்புச் சொற்பொழிவினை சைவப்புலவர் சி. கா. கமலநாதன் " இந்திரன் கயிலைசெல் படலம் " என்னும் விடயப்பொருளில் ஆற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப் பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ)

# 'சிசு செரிய பஸ்' சேவை வவுனியாவில் ஆரம்பம்!

வவுனியா, ஜூன். 16



பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் பாதுகாப்பான போக்குவரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில், "சிசு செரிய" பஸ் சேவையை வடக்கு மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தின் வவுனியா, மன்னார், முல்லைத் தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள மாணவ, மாணவிகளுக்காக இதுவரை "சிசு செரிய" பஸ் சேவைகள் நடைமுறையில் இருக்கவில்லை.

இந்நிலையில், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் போக்குவரத்து அமைச்சு ஆகியன இணைந்து, முதற்கட்டமாக வடக்கு மாகாணத்தினுள் 20 "சிசு செரிய" பஸ்களை இயக்குவதற்குரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர், நாடளாவிய ரீதியில் அனைத்துப் பகுதிகளிலும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்காக 200 இற்கும் மேற்பட்ட புதிய பஸ்களை "சிசு செரிய" சேவையில் இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கென ஒரு பில்லியன் ரூபாவுக்கு அண்மித்த தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "சிசு செரிய" பஸ் சேவை, இதுவரை வட பகுதி பாடசாலை மாணவர்களுக்குக் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. இதற்கு முன்னர் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் ஊடாகவே பொதுப் போக்குவரத்துச் சேவையுடன் இணைந்து மாணவர்களின் போக்குவரத்து மேற்கொள்ளப் பட்டது-என்றார்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். திலகநாதன், ம.ஜெகதீஸ்வரன், வட மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை யின் தலைவர் எஸ். விமலேஸ் வரன் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் என உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையில் புதிய வடிவில் பரவி வரும் டெங்கு வைரஸ்!

## சுகாதார பிரதி அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 16

இலங்கையில் தற்போது பரவி வரும் டெங்கு நோய்த்தாக்கத்திற்கு, மரபணு மாற்றமடைந்த புதிய வகை டெங்கு வைரஸ் ஒன்றே காரணம் என சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக, மக்கள் மத்தியில் இந்த நோய் வேகமாகப் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அத்துடன் தற்போது பரவி வரும் டெங்கு வைரஸானது, கடந்த காலங்களில் நாட்டில் பரவிய வைரஸ் வகைகளுடன் ஒப்பிடுகையில் பல மாற்றங்களைக் கொண்டுள்ளது.

இந்த புதிய வகை வைரஸ் தாக்கம் இதற்கு முன்னர் இலங்கை மக்களிடையே பரவலாகக் காணப்படவில்லை.

இலங்கையர்களில் பெரும்பாலானோருக்கு இந்த புதிய வகை வைரஸ்க்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தி உடம்பில் இல்லை என்பதால், மிக அதிகளவிலான மக்கள் இந்தத் தடவை டெங்கு நோய்த்தாக்கத்திற்கு ஆளாகக்கூடிய அதிக ஆபத்து காணப்படுகின்றது.

இதனால் நாடு முழுவதும் இந்நோய் மிக வேகமாகப் பரவக்கூடும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறிப்பிட்ட கால இடைவெளியில் அதிகரிக்கக்கூடும் என்பதை எதிர்பார்த்து, அதற்கு தேவையான சுகாதார ஏற்பாடுகளை அமைச்சு ஏற்கனவே மேற்கொண்டிருந்தது.

இருப்பினும், இம்முறை பரவும் வைரஸ் முற்றிலும் மாறுபட்டதாக அமைந்துள்ளதாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை அழித்து,



சுகாதார அறிவுறுத்தல்களைக் கடுமையான முறையில் பின்பற்றுமாறு சுகாதார அமைச்சு கேட்டுள்ளது. (அ)

# 2026 ஆரம்பத்தில் ஆடைத்துறை ஏற்றுமதி வருவாய் 7.3 வீதம் சரிவு!

கொழும்பு, ஜூன். 16

இலங்கையின் முக்கிய ஏற்றுமதித் தொழில்களில் ஒன்றான ஜவுளி மற்றும் ஆடைத் துறையின் ஏற்றுமதி வருவாய், 2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் சரிவடைந்துள்ளது.

2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 1,751.8 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் ஜவுளி மற்றும் ஆடை ஏற்றுமதி வருவாய் 1,624.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இது 7.3 விகிதக் குறைவைக் குறிக்கிறது என்ற இலங்கை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் வெளியிட்ட அண்மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 2025 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 4,315.6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாய், 2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 4534.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக சிறிதளவு அதிகரித்துள்ளது.

# சியம்பலாண்டுவ சூரிய மின் திட்டம் 20 வீதமான பணிகள் நிறைவடைவு

கொழும்பு, ஜூன். 16

சியம்பலாண்டுவ சூரிய மின்சக்தி நிலையத்தின் கட்டுமானப் பணிகள் 20 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக குறித்த திட்டத்தின் பணிப்பாளர் சமிகா பெரேரா தெரிவித்துள்ளார்.

500 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இத்திட்டத்தில் ஒற்றை அச்சு கண்காணிப்பு அமைப்பின் கீழ் 200,000 சூரியத் தகடுகள் நிறுவப்படவுள்ளதாகவும், இது சர்வதேச தரத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

45 பில்லியன் ரூபாய் முதலீட்டில் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டம் நிறைவடைந்ததும் தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு 100 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலைகளில் ஜூன் 19 இற்கு பின் சோதனை

## பின்னிருக்கை ஆசனப் பட்டி கட்டாயம்

கொழும்பு, ஜூன். 16

அதிவேக நெடுஞ்சாலைகளில் ஆசனப் பட்டி அணியாமல் பயணிக்கும் சாரதிகள் மற்றும் பயணிகள் இருதரப்பினருக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை எச்சரித்துள்ளது.

வாகனங்களின் பின்னிருக்கைகளுக்கான ஆசனப் பட்டிகளைப் பொருத்துவதற்கு வாகன உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் வரும் ஜூன் மாதம் 19ஆம் திகதியுடன் நிறைவடைவதாக சபையின் தலைவர் மஞ்சுள குலரத்ன தெரிவித்தார்.

ஜூன் 19ஆம் திகதிக்கு பின்னரான காலப்பகுதியில் இந்த விதிமுறையை நடைமுறைப்படுத்தும் பணிகள் மற்றும் சோதனைகள் தீவிரப்படுத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

வீதிப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக,

இந்த விதிமுறை களை மீறுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (அ)

# டெங்கு நோயாளர் முகாமைத்துவம் குறித்து புதிய மருத்துவ வழிகாட்டுதல்கள் வெளியீடு

கொழும்பு, ஜூன். 16

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதன் காரணமாக, டெங்கு நோயாளர் முகாமைத்துவம் தொடர்பான புதிய வழிகாட்டுதல்கள் அனைத்து மருத்துவ நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார பிரதி அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜேமுனி தெரிவித்துள்ளார்.

டெங்கு காய்ச்சல் என சந்தேகிக்கப்படும் நோயாளர்களுக்குத் தேவையான மருத்துவப் பரிசோதனைகளை எவ்வித தாமதமுமின்றி, விரைவாக மேற்கொள்வதை உறுதி செய்யும் வகையில் நோயாளர்களிடமிருந்து இரத்த மாதிரிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அனைத்து உத்தியோகபூர்வ நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

டெங்கு காய்ச்சல் இருப்பதாக சந்தேகிக்கப்படும் ஒவ்வொரு நோயாளரும் தகுதி வாய்ந்த ஒரு மருத்துவ அதிகாரியின் நேரடி மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும் என பிரதி அமைச்சர் வலியுறுத்தினார்.

அத்துடன், மருத்துவர்களினால் கோரப்படும் பட்சத்தில், நோயாளர்கள் தங்களது இரத்த மாதிரிகளைத் தாமதமின்றி வழங்க முன்வர வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சுரேஷ் சாலே சட்டத்தரணியை நாளாந்தம் சந்திக்க முடியாது!

### குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 16

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் உள்ளபோது உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்ததை அடுத்து தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயுக்கு, நாளாந்தம் சட்டத்தரணி உதவியை வழங்குவதைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நிராகரித்துள்ளது.

சுரேஷ் சாலேயின் மனைவி மனோரி சாலேயுக்கு எழுத்து பூர்வமாக அறிவித்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவினால் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


வாரத்தின் 5 நாள்களும் சலே தமது சட்டத்தரணியை சந்திப்பதற்கு அனுமதி வழங்குமாறு மனோரி சாலே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அதன் பணிப்பாளர் ஷானி அபேசேகர இந்த விவரத்தை அறிவித்துள்ளார்.

சுரேஷ் சாலே தற்போது விசாரணை நடவடிக்கைகளில் இருந்து விலகி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதால், இந்தச் சந்தர்ப்பத்தில் அவர் சட்ட ஆலோசனைகளைப் பெறவேண்டிய அவசியம் எழவில்லை என்று அந்தக் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சட்டத்தரணியைத் தொடர்ச்சியாகச் சந்திப்பதன் மூலம் சந்தேக நபருக்குத் தேவையான மன அமைதி இல்லாது போய், அவரது சுகாதார நிலைக்கு மோசமான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும், நீதிமன்ற உத்தரவின் பேரில் ஏற்கனவே ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் மாத்திரம் சட்டத்தரணி அவரைச் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் மனோரி சாலேயுக்கு அனுப்பிய கடிதத்தில் ஷானி அபேசேகர சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## நடைபாதை வியாபாரிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை



அம்பாறை, ஜூன். 16

வீதியோரங்களில் உரிய அனுமதியின்றி பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகளுக்கு இடையூறான நடைபாதை வியாபாரிகளை அகற்றும் மற்றும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் குறித்த முன்னெடுப்பு கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட விபத்துக்கள் மக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் பிரதேச சபை நகரின் அழகை மெருகூட்டுவதற்காகவும் விசாலமான வீதி ஊடாக பாதுகாப்பான போக்குவரத்து வசதியை மேற்கொள்ளும் வகையிலும் இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது சம்மாந்துறை பிரதேச சபை மற்றும் பொலிஸார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இணைந்து இச்செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் சம்மாந்துறை நகரின் வீதியோரங்களில் உரிய அனுமதியின்றி இயங்கி வந்த நடைபாதை வியாபாரிகள் அகற்றப்பட்டதுடன் ஏனையோரை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. (அ)

## சாய்ந்தமருது அல்-ஜலால் பாடசாலையில் சிறுவர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு



அம்பாறை, ஜூன். 16


சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட அல்-ஜலால் வித்தியாலயத்தில், சிறுவர் பாதுகாப்பு மற்றும் தொற்றா நோய்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் சிறுவர் பாதுகாப்புப் பிரிவு, பாடசாலை சமூகம் மற்றும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மாதனின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் செயற்பாட்டுப் பங்களிப்புடன் மாணவர்களுக் கான அறிவூட்டல் அமர்வு களை நடத்தினர். இதன்போது, தொற்றா நோய்கள் குறித்த அடிப்படை அறிவு, அவை உருவாகக் காரணமாகும் வாழ்க்கை முறைப் பழக்க வழக்கங்கள், அதிகளவு சர்க்கரை, உப்பு மற்றும் கொழுப்பு கொண்ட உணவுகளை உட்கொள்வதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக் கங்களின் அவசியம் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், சமூகத்தில் பரவலாகக் காணப்படும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய நோய்கள் உள்ளிட்ட தொற்றா நோய்கள் பற்றியும், அவற்றைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

அதேவேளை, சிறுவர் பாதுகாப்பின் முக்கியத்துவம், குழந்தைகளின் அடிப்படை உரிமைகள், பாதுகாப்பான கல்விச் சூழலை உருவாக்குவதில் மாணவர்களும் சமூகமும் வகிக்க வேண்டிய பொறுப்புகள் தொடர்பிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. (அ)

## கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக றாபி நியமனம்



திருமலை, ஜூன். 16

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர அதிகாரியானஏ.ரி.எம். றாபி நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவினால் நேற்று திங்கள்கிழமை இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஜனவரி 01 முதல் கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக கடமையாற்றி வந்த நிலையில் அவருக்கு இப்பதவி உயர்வு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கு முன்னதாக அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவும் அக்கரைப்பற்று மாநகர சபையின் ஆணையாளராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

உள்ளூராட்சி நிர்வாகத்துறையில் நீண்ட கால அனுபவமும் ஆற்றலும் நிறைந்த ஏ.ரி. எம். றாபி, அத்துறையின் மாகாண ஆணையாளராக நியமிக்கப்பட்டிருப்பதானது மாகாண உள்ளூராட்சி நிர்வாகம் மற்றும் சேவைகளுக்கு கிடைத்திருக்கின்ற பெரும் வரப்பிரசாதமாக நோக்கப்படுகிறது. (அ)

## கண்ணகி நிருத்தியாலயம் அமைப்பினரின் நாட்டியாஞ்சலி நிகழ்வு வெல்லாவெளியில்!

மட்டக்களப்பு, ஜூன். 16

மட்டக்களப்புப் போரதீவுப் பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கணேசபுரம் கண்ணகி நிருத்தியாலயம் அமைப்பின் நாட்டியாஞ்சலி அரங்கேற்றம் நேற்று வெல்லாவெளி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கணேசபுரம் கண்ணகி நிருத்தியாலயத்தின் ஆசிரியை இ. வினித்தாவின் ஒழுங்கமைப்பில் தலைவி ஜெயலதா சுமேந்திராஜா தலைமையில்நிகழ்வு நடைபெற்றது.

"பரதமே நம் பாரம்பரியம், பண்பாட்டின் பெருமையைப் போற்றும் இனிய கலைவிழா" எனும் தொனிப்பொருளில் போரதீவுப்பற்று பிரதேசத்தில் முதன் முறையாக பரத நாட்டிய நாட்டியாஞ்சலி அரங்கேற்றம் இடம்பெற்றது.

நிகழ்வில் போரதீவுப் பற்று வெல்லாவெளி பிரதேச சபையின் தவிசாளர் வி. மதிமேனன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக கல்வியாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.(அ)

## பத்து இலட்சம் ரூபாய் செலவில் மத்தியமுகாமில் விவசாய பாதை



அம்பாறை, ஜூன். 16

கிழக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் அம்பாறை மத்திய முகாம் நாவிதன்வெளி பிரதேசத்திற்குட்பட்ட பன்னிரண்டாம் கிராமத்தில் விவசாய பாதை ஒன்று அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அன்னமலை விவசாய போத னாசிரியர் பி.குணநீதராசா வர வேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வில் நிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஎல் எம்.அஸ்மி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார் .

நாவிதன்வெளி பிரதேச சபை தவிசாளர் இ.ரூபசாந்தன் , கிழக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எம்.எஸ். றினோஸ், அம்பாறை மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் பி.திலாநாயக்க, உதவி விவசாய பணிப்பாளர் எஸ்.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலங்கை பொருளாதாரம்...

மில்லியன் ரூபாயை எட்டியுள்ளது

பொருளாதாரத்தின் பிரதான மூன்று துறைகளான கைத்தொழில், சேவை மற்றும் விவசாயம் ஆகிய அனைத்துத் துறைகளும் இந்த வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்துள்ளன.

குறிப்பாக, கட்டுமான மற்றும் சுரங்கத் தொழில்களின் முன்னேற்றத்தால் கைத்தொழில் துறை 7.2 வீத உயர்வைக் கண்டுள்ளதோடு, நிதி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுலாத் துறைகளின் பங்களிப்பால் சேவைத் துறை 3.4 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டு வீழ்ச்சியைக் கண்டிருந்த விவசாயத் துறை இம்முறை 1.1 வீத நேர்மறையான வளர்ச்சியைப் பெற்றுள்ளது

"டிட்வா" சூறாவளிப் பாதிப்புகள் மற்றும் வளைகுடா பிராந்தியத்தின் புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியிலும், மூலதனப் பொருட்களின் இறக்குமதி அதிகரிப்பு மற்றும் வட்டி வீதக் குறைப்பு என்பன காரணமாக இலங்கை பொருளாதாரம் இந்த நிலையான வளர்ச்சியை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அதிஉயர் பாதுகாப்பு வலயம்...

யாழ். மாவட்ட செயலக முன்றலில் தமது காணிகளை விடுவிக்கக் கோரி அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மயிலிட்டி மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை நேரில் சந்தித்துத் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை உத்தியோகபூர்வமாகக் கையளித்தனர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி இடம் பெயர்ந்த தமது மக்கள், 36 வருடங்கள் நிறைவடைந்த நிலையிலும் இன்னும் அகதிகளாகவே வாழ்ந்து வருவதாகத் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ள மயிலிட்டி மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழுவினர், ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்காக இரண்டு பிரதான கோரிக்கைகளைத் தமது மனுவில் முன்வைத்துள்ளனர்.

2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிஉயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி (இல. 1810) முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

மயிலிட்டியில் தொடர்ச்சியாக நிலம் மீட்பதற்காக அறவழியில் போராடி வரும் ஜே/248, ஜே/251, ஜே/255 மற்றும் ஜே/246 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களின் காணிகள் முதற்கட்டமாக விடுவிக்கப்பட வேண்டும் -என்ற இந்தக் கோரிக்கைகள் அடங்கிய மனுவைப் பெற்றுக்கொண்ட ஆளுநர், உரிய துரித நடவடிக்கைகளுக்காக அதனை உடனடியாக ஜனாதிபதி அனுப்பி வைத்துள்ளார். (அ)

## இராணுவத்தை உடன் வெளி...

போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலிகாமம் வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவு மக்கள் இராணுவ நடவடிக்கையினால் தங்களின் பூர்வீக மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இலங்கையில் கொடூர யுத்தம் முடிவடைந்து 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும், அகதிகளாகியுள்ள இந்தப் பகுதி மக்களை இன்னமும் அவர்களின் சொந்த நிலங்களில் மீள்குடியேற அனுமதிக்காது, மக்களின் வளமான காணிகளை இராணுவத்தினர் தொடர்ந்தும் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.

இந்நிலையில், மக்களின் பூர்வீகக் காணிகளில் இருந்து இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றி, தங்களைச் சொந்த இடங்களில் சுதந்திரமாக வாழ அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தியே இவ்விரு இடங்களிலும் ஒரே நேரத்தில் மக்கள் திரண்டு போராட்டங்களை நடத்தினர்.

நேற்றைய போராட்டத்தின் போது, தங்களின் பூர்வீகக் காணி விடுவிப்பு மற்றும் உடனடி மீள்குடியேற்றம் தொடர்பான நியாயமான கோரிக்கைகள் அடங்கிய விசேட மகஜர் ஒன்று யாழ். மாவட்ட அரச அதிபரிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் போராட்டக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்குச் சென்று ஆளுநரிடமும் தங்களின் கோரிக்கை மகஜரை நேரில் கையளித்தனர். அத்துடன், இந்தப் பிரச்னையைத் தேசிய மட்டத்துக்குக் கொண்டு செல்லும் நோக்கில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதத் தலைவர்களிடமும் இந்த மகஜரின் பிரதிகள் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில், மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பிரதேச சபைகளின் முன்னாள் தவிசாளர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பல்துறை சார்ந்த அரசியல் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு மக்களுக்குத் தங்களின் ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர். (அ)

## ஊடகங்களின் முக்கிய...

திலித் ஜயவீர, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, சுகீஸ்வர பண்டார, மகிந்த பத்திரண மற்றும் அசங்க நவரத்ன ஆகியோரால் வெளியிடப்பட்ட கருத்துக்களே இவ்வாறு நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளது

கொழும்பு கோட்டை நீதவான் பசன் அமரசேன முன்னிலையில் நேற்று விசேட மனுவொன்றைத் தாக்கல் செய்தே புலனாய்வு அதிகாரிகள் இந்த விவரங்களை மன்றுக்கு அறிவித்துள்ளனர்

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே முறையான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள புலனாய்வு அதிகாரிகள், 2024 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நீதிமன்ற, தீர்ப்பாய அல்லது நிறுவன அவமதிப்புச் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் உத்தியோகபூர்வமாகக் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் நீதிமன்றத்தில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## நெடுந்தீவுக்கான போக்கு...

அந்நிலையில் , குறித்த படகுகளை துரிதமாக திருத்தி மீண்டும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அதில் வடதாரகையின் திருத்தப் பணிகள் நிறைவடைந்த நிலையில் , நேற்று முதல் பயணிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, நெடுந்தாரகை படகு தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் திருத்தப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதன் பணிகள் நிறைவடைந்தவுடன், அந்தப் படகும் விரைவில் மீண்டும் சேவையில் இணைக்கப்படும்

மேலும், குமுதினி படகு இயந்திரக் கோளாறு காரணமாக சேவையிலிருந்து விலக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அதன் இயந்திர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருத்தப் பணிகள் நிறைவடைந்தவுடன், குமுதினி படகும் மக்களின் பயன்பாட்டிற்காக மீண்டும் சேவையில் இணைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாலேயுக்கு எந்த...

மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் சரியான பாதையில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. வெளிவரும் சாட்சியங்களின் அடிப்படையில் சில நபர்கள் கைது செய்யப்படுகிறார்கள். மேலதிக விசாரணைகளுக்காக அவர்களுக்கு எதிராக தடுப்புக் காவல் உத்தரவுகள் பெறப்படுகின்றன.

இந்த விபரங்கள் அனைத்தையும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம், அவ்வப்போது பி அறிக்கைகள் மூலம் நீதிமன்றத்திற்கு அறிக்கை செய்கிறது.

அதன் அடிப்படையிலேயே சுரேஷ் சாலே தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முதலாவது 90 நாள்கள் தடுப்புக் காவல் காலம் மே மாத இறுதியில் நிறைவடைந்தது. தற்போது மேலும் 90 நாள்களுக்கான தடுப்புக் காவல் உத்தரவு கையெழுத்திடப்பட்டு, அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விசாரணைகள் விரைவுபடுத்தப்பட வேண்டுமாயின், காவலில் உள்ள சுரேஷ் சாலே தமக்குத் தெரிந்த தகவல்களை விரைவாக வழங்க வேண்டும்.

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே அவர் குற்றமற்றவர் என நிரூபிப்பதற்கான வழியாகும்.

தவறு செய்திருந்தால் மட்டுமே தகவல்களை மறைக்க வேண்டிய தேவை ஏற்படும். குற்றமற்றவர் என்றால் அச்சப்படாமல் விசாரணைகளுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

தற்போது அவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது ஊட்டச்சத்து நிலைமையில் எந்தப் பிரச்னையும் இல்லை என்பது அறிக்கைகள் மூலம் உறுதியாகியுள்ளது.

அதற்குத் தேவையான ஊட்டச்சத்துகள் முறையாகக் கிடைக்கின்றன. எனவே, அவரால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளுக்கு ஒத்துழைக்க முடியும்.

தடுப்புக் காவல் உத்தரவில் உள்ள ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் சில உள்ளன. அவை அனைத்தும் சாலேயிற்கு வழங்கப்படுகின்றன.

அவர் மருத்துவ சிகிச்சை கோரியபோது அது வழங்கப்பட்டது; பல் மருத்துவ சிகிச்சை கோரியபோதும் அது வழங்கப்பட்டது. அவருக்கு சிறப்புச் சலுகைகளோ அல்லது புறக்கணிப்புகளோ காட்டப்படவில்லை, சாதாரண நடைமுறையே பின்பற்றப்படுகிறது.

விசாரணைகளைச் சரியாக முன்னெடுக்கும் அதிகாரி ஒருவரை நீக்குமாறு யாராவது கூறினால், அவ்வாறு குற்றம் சுமத்தும் நபரே குற்றவாளி என்பது அதிலிருந்து தெளிவாகப் புலனாகிறது-என்றார். (அ)

## சுரேஸ் சாலேயை விசாரியுங்கள்...

மனித குலத்திற்கு எதிரானது, அதனை முழுமையாக இரத்துச் செய்ய வேண்டும்" எனக் கடந்த காலங்களில் கூறிவந்த மக்கள் விடுதலை முன்னணி, இன்று அதே சட்டத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டு வருகின்றது என்றும் அவர் கடுமையாகச் சாடினார்.

கண்டியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை விசேட நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தாக்குதல் நடந்து 7 நாள்கள் கடந்தும் அப்போதைய அதிகாரிகள் நீதி மன்றத்துக்கு "பி" அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. நாட்டில் ஒரு சிறு அசம்பாவிதம் நடந்தாலும் 24 மணித்தியாலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியது பொலிஸாரின் கடமையாகும்.

அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பிக்காததால், நீதி அமைச்சராக இருந்த நான் முறைப்பாடளிக்குமாறு எழுத்துமூலமாக அறிவுறுத்தினேன். அதன் பின்னரே, கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு "நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் முறைப்பாடளிக்கின்றோம்" எனப் பொலிஸார் அறிவித்தனர்.

எமது ஆட்சிக்காலத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் சிறந்த முறையில் விசாரணைகளை மேற்கொண்டு 80 குற்றவாளிகளை அடையாளப்படுத்தி, 41 வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தோம்.

இவ்வாறான நிலையில், அப்போதைய சட்டமா அதிபர் தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒருநாளுக்கு முன்னரே, "குண்டுத்தாக்குதலின் பின்னணியில் பிரதான சூத்திரதாரி உள்ளார்" என அறிக்கை விட்டார். இது குறித்து அவரிடம் வாக்குமூலம் பெற முற்பட்ட போது, அவர் நீதிமன்றத்தை நாடி அதற்குத் தடை உத்தரவு பெற்றார்.

இது தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நான் வினவியபோது, "குறித்த சட்டமா அதிபர் தனது சேவை காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்குமாறு கோரினார், அதற்கு நான் இணங்கவில்லை என்பதால் தான் பழிவாங்கும் நோக்கில் இவ்வாறு குறிப்பிடுகிறார்" என என்னிடம் தெளிவாகக் கூறினார்.

குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கைது செய்வதாகவும், உண்மையை வெளிப்படுத்துவதாகவும் வாக்குறுதி அளித்தே தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்தது. கடந்த ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதிக்குள் பிரதான சூத்திரதாரியை பகிரங்கமாக அறிவிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க குறிப்பிட்டிருந்தார். ஆனால், இன்றுவரை எந்த உண்மையும் வெளிப்படுத்தப்படவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில், சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய சட்டமூலத்தை நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தோம். ஆனால், மக்கள் விடுதலை முன்னணியின் மூன்று உறுப்பினர்களும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதிமன்றத்தை நாடினர்.

யுத்தம் இல்லாத நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் எதற்கு என்று மேடைகளில் முழங்கியவர்கள், இன்று அதே சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செயற்படுகின்றார்கள்.

கடந்த 75 ஆண்டுகால வரலாற்றைச் சாபம் என்று விமர்சிக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, கடந்த காலங்களை வசைபாடுவதை விடுத்து நாட்டுக்காக என்ன செய்யப்போகின்றார் என்பதை நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம்-என்றார். (அ)

## 5 படுகொலைச் சம்பவங்க...

பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த 2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற தொடர் படுகொலைகள் குறித்து முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளின் ஒரு பகுதியாகவே, மட்டக்களப்பு நீதவான் அண்ணாதுரை தர்ஷினி முன்னிலையில் இந்த விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் முன்வைத்துள்ள அறிக்கையின்படி, வெவ்வேறு இடங்களில் ரி-56 ரக துப்பாக்கிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட பல கொடிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து இந்த விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அதன்படி, கடந்த 2008ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி முருகன் கோவிலை ஒட்டியுள்ள விளையாட்டு மைதானத்துக்கு அருகில் இருவர் ரி-56 துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டமை மற்றும் 2008 மே 22ஆம் திகதி காத்தான்குடி பிரதான வீதியில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டமை ஆகிய சம்பவங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், வவுணதீவு பொலிஸ் அதிகார எல்லைக்குட்பட்ட கொத்தியாபொல பகுதியில் வசித்துவந்த அழகதுரை தர்மலிங்கம் என்பவர், அடையாளம் தெரியாத ஆயுதக் குழுவொன்றினால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விவரங்களையும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

இதனிடையே, கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தல் உட்பட மனித கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட பிள்ளையான் மற்றும் இராணுவ புலனாய்வுப் பிரிவின் தகவலாளிகள் இருவரையும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அதன்போது அவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சிவனேசத்துரை சந்திரகாந்தன் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து கடந்த 2025 ஏப்ரல் 7ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# 2.5 மில்லியன் டொலர் மோசடி; விசேட தெரிவுக்குழு வேண்டும்

## சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூன். 16

2.5 மில்லியன் டொலர் மோசடி விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற விசேட தெரிவுக் குழுவை அமைக்குமாறு, சுதந்திர சட்டத்தரணிகள் சங்கம், ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அந்த சங்கம் விடுத்துள்ள கோரிக்கையில்-

திறைசேரி மற்றும் இலங்கை மத்திய வங்கி மோசடி என்பது, சாதாரண மோசடி மட்டுமல்ல, அது நாட்டின் நிதி அமைப்பில் உள்ள பலவீனங்களையும், நிதி அமைச்சின் தொழில் முறைசாரா செயற்பாட்டையும் வெளிப்படுத்துவதாகும்.

இலங்கை மத்திய வங்கி, நிதிச் சட்டத்தின் மூலம் சுயாதீனமாக்கப்பட்ட பின்னர், எந்தவொரு தரப்பிற்கும் பொறுப்புக்கூறாத மற்றும் கட்டுப்படாத ஒரு நிறுவனமாகத் தன்னைத்தானே வரைவிலக்கணப்படுத்திக் கொண்டுள்ளமை இங்குள்ள பிரதான பிரச்னையாகும்.

திறைசேரியின் மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும், இவ்வாறானதொரு நிலைமை மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கும், பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் -

என வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# சுங்கத் தீர்வை செலுத்தாமல் கடத்தப்பட்ட பொருள்கள் மீட்பு

## நாரம்மலவில் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன். 16

குருநாகல் - நாரம்மல, ஹொரம்பாவ பகுதியில் சுங்கத் தீர்வை செலுத்தாமல் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான இறக்குமதிப் பொருள்களுடன் கொள்கலன் பாரவூர்தி ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் 41 வயதுடைய சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் குளியாபிட்டிய பிராந்திய குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காவல்துறையினரின் சோதனையின் போது, 190 வெளிநாட்டு மதுபானப் போத்தல்கள், மோட்டார் சைக்கிள் பாகங்கள், 42 மோட்டார் சைக்கிள் சேஸிகள் மற்றும் 44 மோட்டார் சைக்கிள் எஞ்சின்கள், மிதிவண்டிகள் மற்றும் மிதிவண்டி பாகங்கள், 6 போர்க்லிப்ட்கள் மற்றும் 3 அகழ்வாராய்ச்சி இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள் மற்றும் பல்வேறு வீட்டு உபயோகப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஹொரம்பாவ பகுதியைச் சேர்ந்தவரான சந்தேகநபர், மேலதிக விசாரணைகளுக்காக குளியாபிட்டிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)



பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று சங்கானை பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் செய்தார். அங்கு வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியை சந்தித்து கலந்துரையாடியதுடன் வைத்தியசாலையை பார்வையிட்டு தேவைகளையும் குறைபாடுகளையும் கேட்டறிந்தார். (அ)

# விவசாயிகளை நிர்க்கதிக்கு உள்ளாக்கியுள்ள அநுர அரசு!

## சாடுகின்றார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஜூன். 16

நாட்டில் விவசாயத்துறைக்கு முக்கியத்துவம் அளிக்காமல், விவசாயிகளை நிர்க்கதிக்குள்ளாக்கும் வகையில் செயற்பட்டு வருவதாகக் கடுமையான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உருவாக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களின் நீர் இன்று வீணாகப் போகிறது. உரங்களின் விலை கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ள போதிலும் விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான விலை வழங்கப்படுவதில்லை. இதனால் ஏமாற்றமடைந்த இளைய தலைமுறையினர் விவசாயத்தை விட்டு முழுமையாகத் தூரமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உலகளாவிய மாற்றங்களுக்கு ஏற்ப, இளைஞர்களைத் தொழில்நுட்பத்துடன் இணைத்து விவசாயத்தில் ஈடுபடுத்துவதன் மூலமே அதிக வருமானத்தை ஈட்ட முடியும். ஆனால், தற்போதைய அரசாங்கத்தின் தவறான நடைமுறைகளால், அடுத்த தலைமுறையினர் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுகளை மட்டுமே நம்பி வாழும் ஒரு சார்பு மனநிலைக்கு தள்ளப்பட்டு வருகிறார்கள்.

இந்த அவல நிலையை மாற்றியமைக்க, கட்சிப் பாகுபாடுகளைக் கடந்து அனைத்துத் தரப்பு மக்களும், இளைஞர்களும் ஒன்றிணைய வேண்டும். எதிர்கால சந்ததியினரின் நலனைக் கருத்திற்கொண்டு, நாட்டுக்கு உகந்த ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கவும், அதற்கு வலுசேர்க்கும் வகையில் ஒரு பிரம்மாண்டமான அரசியல் சக்தியாக அனைவரும் அணிதிரள வேண்டும்-என்றார்.

# வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் இதுவரை 40 இலட்சம் பேர் பெறவில்லை!

கொழும்பு, ஜூன். 16

இலங்கையில் 18 வயதிற்கு மேற்பட்ட சுமார் 40 இலட்சம் பேர் இதுவரை வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தை (ரின்) பெற்றுக்கொள்ளவில்லை என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திணைக்களம் வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, நாட்டில் இதுவரை 13 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு "ரின்" இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போதைய சட்ட விதிகளின்படி, 18 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்துக் குடிமக்களும் இந்த அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, ஒட்டுமொத்தமாக சுமார் 17 மில்லியன் மக்கள் இந்த திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2026 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்ட) சட்டத்தின் கீழ், பல்வேறு முக்கிய பொதுப் பரிவர்த்தனைகளுக்கு வரி செலுத்துவோர் அடையாள இலக்கம் தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, புதிய வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல் மற்றும் வருடாந்தம் புதுப்பித்தல், புதிய வணிகங்களைப் பதிவு செய்தல், நிறுவனங்களின் பங்குகளைப் பரிமாற்றம் செய்தல், கடன் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகிய தேவைகளுக்கு "ரின்" இலக்கத்தைச் சமர்ப்பிப்பது அவசியமாகும்.

இதேவேளை, கொண்டுவரப்பட்டுள்ள புதிய சட்டத் திருத்தத்தின் கீழ், வரி செலுத்துவோர் அடையாள இலக்கங்கள் இனிமேல் இரகசியத் தகவலாகக் கருதப்படமாட்டாது என்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# செய்யவேண்டிய பணிகளை மிகச் சரியாகச் செய்கிறோம்

## பிரதி அமைச்சர் கௌசல்ய ஆரியரத்ன

கொழும்பு, ஜூன். 16

எங்கள் மீதான சேறு பூசல்கள், அவதூறுகள் மற்றும் கேலிப் பேச்சுகள் எதையும் பொருட்படுத்தாமல், நாங்கள் செய்யவேண்டிய பணிகளை மிகச் சரியாகச் செய்து வருவதாக வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்ய ஆரியரத்ன தெரிவித்துள்ளார்

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில வருடங்களை எடுத்துப் பார்த்தால், இந்த நாட்டுக்கு உண்மையாகவே நல்லது செய்தது யார் என்பது மக்களுக்கு நன்றாகவே புரியும். "நாங்கள் தான் மிகச் சிறந்த முறையில் நாட்டை வழிநடத்துவோம்" என்று கூறிக்கொண்டு வந்தவர்களால்தான் மக்கள் வீதிகளில் நீண்ட வரிசைகளில் நிற்க வேண்டியிருந்தது. அந்த வரிசைகளில் நின்ற பலர் உயிரிழந்தார்கள்.

பால் மா, எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கூட பெற்றுக்கொள்ள முடியாமல் மக்கள் தவித்தார்கள் வாழ்வாதாரத்தை இழந்து, வேலைவாய்ப்புகளை இழந்து, வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் உலக நாடுகளிடம் கையேந்தும் ஒரு நாடாக இந்த நாட்டை அவர்கள் மாற்றினார்கள்.

அப்படிப்பட்ட ஒரு குழுவினர் இப்போது மீண்டும் வந்து, எங்களால் தான் நாட்டைச் சரியாகக் கொண்டு செல்ல முடியும் என்று கூறும்போது, அதை நாம் ஒரு நகைச்சுவையாகவே பார்க்க வேண்டும். இதற்காக நாம் நேரத்தைச் செலவழிக்கவேண்டிய அவசியமில்லை. எங்கள் மீதான சேறு பூசல்கள், அவதூறுகள் மற்றும் கேலிப் பேச்சுகள் எதையும் பொருட்படுத்தாமல், நாங்கள் செய்ய வேண்டிய பணிகளை மிகச் சரியாகச் செய்து வருகிறோம். நாங்கள் எவ்வளவு கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறோம் என இந்த நாட்டின் அடிமட்ட மக்களுக்கு நன்றாகத் தெரியும் -என்றார். (அ)

# தீவகத்தில் மாடுகளை களவாடிய குற்றத்தில் 7 பேர் கொண்ட கும்பல் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஜூன். 16

தீவகம் பகுதியில் மாடுகளை களவாடி சட்டவிரோதமாக இறைச்சியாக்குதல், வீடுகளை உடைத்துத் திருட்டில் ஈடுபடுதல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 7 நபர்களை ஊர்காவற்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களில் பிரதான சந்தேக நபரிடம் இருந்து 2300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வேலணை, புங்குடுதீவு மற்றும் அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளில் பண்ணையாளர்களின் மாடுகள் களவாடப்பட்டு சட்டவிரோதமாக இறைச்சியாக்கும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்திருந்தன.

அதேவேளை, வீடுகளை உடைத்து நகைகள் மற்றும் பணம் என்பவற்றை களவாடும் சம்பவங்களும் அதிகரித்து இருந்தன.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்புக்கள், ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன் அடிப்படையில் குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 07 நபர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பிரதான சந்தேக நபரிடம் இருந்து 2300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளையும் பொலிஸார் மீட்டனர். (அ)

# யால தேசிய பூங்காவில் விதி மீறல் சுற்றுலாப் பயணிகள் ஐவர் கைது!

கொழும்பு, ஜூன். 16

யால தேசிய பூங்காவில் வனவிலங்கு சட்டங்களை மீறியதாகக் கூறப்படும் ஐந்து சுற்றுலாப் பயணிகளை வனவிலங்கு அதிகாரிகள் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

சபாரிக்காக இரண்டு ஜீப் வண்டிகளில் பயணித்த [illegible], அதிகாரிகளை அச்சுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டு திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய ஜீப் வண்டிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என யால ஜீப் சங்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினால் 16.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.